செ.வெ.எண்: 128 நாள்: 28.02.2021

**தஞ்சாவூர் துணை வாக்குச்சாவடி நிலையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.**

தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தஞ்சாவூர் மாநகராட்சி, மாதாக்கோட்டை ஊராட்சி பகுதிகளில் துணை வாக்குச்சாவடி நிலையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ம. கோவிந்தராவ் இ.ஆ.ப. அவர்கள் இன்று( 28.02.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

எதிர்வரும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆயிரம் வாக்காளர்களுக்கு மேல் உள்ள வாக்குச் சாவடிகளில் துணை வாக்குச்சாவடி மையம் அமைக்க தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியது. அதனடிப்படையில் தஞ்சாவூர் மாநகராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட அரசர் மேல்நிலைப்பள்ளி, மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி தெற்கு கீழ் அலங்கம் மற்றும் மாதா கோட்டை ஊராட்சி தூய மிக்கேல் மேல்நிலைப்பள்ளி ஆகிய வாக்குச்சாவடி மையங்களில் துணை வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் வாக்குச்சாவடி மையங்களில் போதிய வசதிகள் உள்ளதா எனவும் , முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சாய்வு தளம் முறையாக உள்ளதா எனவும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் அலுவலரிடம் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் அடிப்படை வசதிகள் உள்ளதா எனவும், சாய்வு தளம் முறையாக உள்ளதா எனவும் ஆய்வு செய்து உறுதி செய்ய அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது மாநகராட்சி ஆணையர் திருமதி . ஜானகி ரவீந்திரன், தஞ்சாவூர் வட்டாட்சியர் திரு . பாலசுப்பிரமணியன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.